**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு - 2024**

**-----------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (''என்ஓசீஎஸ்எல்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து என்ஓசீஎஸ்எல் இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள (எஸ்எம்ஈஎஸ்களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள (எஸ்எம்ஈஎஸ்களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி என்ஓசீஎஸ்எல் இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் என்ஓசீஎஸ்எல் இன் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- என்ஓசீஎஸ்எல் இன் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- என்ஓசீஎஸ்எல் இன் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் என்ஓசீஎஸ்எல் இணங்கியிருந்ததா என்பதும்,

- என்ஓசீஎஸ்எல இன் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- என்ஓசீஎஸ்எல் இன் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ்களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட சட்டச் செலவுகள் ரூபா.11,091,325 ஆகும். இருப்பினும், எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 21.15 மற்றும் 21.16 ஆகிய பந்திகளில் கோரப்பட்டுள்ளவாறு, அது தொடர்பான சட்ட வழக்குகளின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது குறித்து ஒரு விசேட குறிப்பினை இடுவதோடு, அத்தகைய குறிப்பினை நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்குவோம். | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் உடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது என்ஓசீஎஸ்எல் உடன் பதிவுசெய்யப்பட்ட உறுப்பு விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா.42,560,616 என கணக்காய்வு மாதிரிப் பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. இருப்பினும், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 33.9 ஆம் பந்தியில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் சார்ந்த தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்படவில்லை. | என்ஓசீஎஸ்எல் இன் விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் களின் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. இதற்காக ஒரு விசேட குறிப்பைச் சேர்க்க முடியும். | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கா ன எஸ்எல்எவ்ஆர்எஸ் உடன் இணங்க வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட, ரூபா.1,476,600 பெறுமதியுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தச் சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்காக எந்தவொரு சொத்து சரிபார்ப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கிரயங்கள் (நிலையான சொத்துக்கள் உட்பட) சம்பந்தப்பட்ட செயற்திட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படாத அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணவும், சரிபார்க்கவும் மற்றும் இனங்காணவும் தேசிய ஒலிம்பிக் குழு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் ரூபா. | வித்தியாசம் ரூபா. | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| செலுத்தவேண்டியவைகள் | 23,760,635 | 31,008,914 | 7,248,279 | வித்தியாசத்திற்கான விளக்கங்கள் கிடைக்கப்பெறவில்லை. | செலுத்தவேண்டிய கணக்குகளை இணக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, மொத்தமாகப் பெறப்படவேண்டிய தொகையான ரூபா.25,009,172 இல் ரூபா.5,118,746 தொகை இந்த அறிக்கை வெளியிடப்படும் திகதி வரை வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மேலும், இந்த நிலுவைச் மீதிகளை வசூலிப்பதற்கு எவ்வித பயனுள்ள மீட்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள பெறப்படவேண்டிய தொகைகளை விளக்கும் ஆவணம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | என்ஓசீஎஸ்எல் மேலும் தாமதமின்றி பெறப்படவேண்டிய தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விளையாட்டுகளுடன் தொடர்புடைய குற்றங்களைத் தடுத்தல். சட்டம் | வெளிநாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களால் புரியப்பட்ட சட்டவிரோதச் செயல்கள் தொடர்பான பதிவுகளைத் தேசிய ஒலிம்பிக் குழு பேணியிருக்கவில்லை. மேலும், இவ்வாறான சட்டவிரோதச் செயல்களுக்கு எதிராகத் தேசிய ஒலிம்பிக் குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விபரங்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நீங்கள் கோரியது போன்றதொரு அறிக்கையை எதிர்காலத்தில் தயாரிக்க நாங்கள் எதிர்பார்க்கிறோம். | விளையாட்டு ஒழுங்குவிதிகளுக்குக் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 44,942,548 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,813,606 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 56,756,154 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்தவருமானம் ரூபா. 83,013,052 ஆல் குறைவடைந்தமையே இந்த பின்னடைவிற்குப் பிரதான காரணமாகவிருந்தது.

## 2.2 முக்கிய வருவாய் மற்றும் செலவின இனங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம், செலவீனங்கள், போக்குப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | வித்தியாசம் (சாதகம்/(பாதகம்) | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| **வருமானம்** | | | | |
| ஜஓசீ, ஓசீஏ மற்றும் ஏனையவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள் | 58,973,650 | 77,273,996 | (18,300,346) | 23.68 |
| வட்டி வருமானம் | 14,497,825 | 20,500,384 | (6,002,559) | 29.28 |
| வாடகை வருமானம் | 9,272,975 | 14,874,550 | (5,601,575) | 37.66 |
| செயற்திட்ட வருமானம் | 93,553,161 | 145,546,350 | (51,993,189) | 35.72 |
| ஏனைய வருமானம் | 5,052,707 | 6,168,090 | (1,115,383) | 18 |
| **செலவீனங்கள்** | | | | |
| செயற்பாட்டுச் செலவீனங்கள் | 109,814,569 | 160,077,891 | 50,263,322 | 31.39 |
| நிர்வாகச் செலவீனங்கள் | 51,835,915 | 47,204,980 | (4,630,935) | 9.81 |
| சட்டக் கட்டணங்கள் | 11,091,325 | - | (11,091,325) | 100 |
| ஏனைய செலவீனங்கள் | 53,551,057 | 45,266,893 | (8,284,164) | 18.30 |

.இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் ரூபா.18.3 மில்லியன் அல்லது 23.68% ஆல் குறைந்துள்ளன. இது வெளிப்புற நிதி உதவி குறைந்துள்ளதையோ அல்லது நிதி வழங்கலில் ஏற்பட்டுள்ள தாமதங்களையோ குறிக்கலாம். அதேபோல், செயற்திட்ட வருவாயிலும் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது, இது ரூபா.51.99 மில்லியன் அல்லது 35.72% குறைந்துள்ளது. இது நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களின் அளவு, தொடர்ச்சி அல்லது அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த கவலைகளை எழுப்புகிறது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒலிம்பிக் குழு, குத்தகைதாரரிடமிருந்து எவ்வித முற்பணங்கள் தொகையையும் பெறாமல், தனது உணவக வளாகத்தை மாதாந்த வாடகை ரூபா. 750,000 வீதம் இரண்டு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக 2022 நவம்பர் 01 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் | கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை. | நிலுவையிலுள்ள வாடகைகளை வசூலிப்பதற்கும், சொத்தை திறம்படப் பயன்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்தது. இவ்வறிக்கை வெளியிடப்படும் திகதி வரை ரூபா. 9,051,979 பெறுமதியான குத்தகை வாடகை வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ்வுணவகம் 2023 ஏப்ரல் முதல் மூடப்பட்டுள்ளதுடன், அதன்பின்னர் பயன்படுத்தப்படாமலும் இருந்துள்ளது. நிலுவை வாடகைகளை வசூலிக்கத் தவறியமையும், சொத்தை திறம்படப் பயன்படுத்தாமை பலவீனங்களைக் காட்டுகின்றது. | | |
| (ஆ) | பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பிற்கு இணங்க, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் தேசிய விளையாட்டு சம்மேளனங்களாக அல்லது சங்கங்களாகப் பதிவு செய்யப்படாத இரண்டு (02) விளையாட்டு அமைப்புகள், தேசிய ஒலிம்பிக் குழு வின் உறுப்பினர்களாக நடத்தப்பட்டிருந்தன. | இந்தச் சங்கங்கள் வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் விசேட கூட்டங்களில் அவதானிப்பாளர் மட்டத்தில் மட்டுமே கலந்துகொள்ள முடியும் என்பதுடன், எக்காலத்திலும் வாக்களிக்க தகுதியற்றவர்களாவர். | நிர்வாகக் கட்டமைப்பிற்கு இணங்க வேண்டும். |
| (இ) | பல்வேறு நடவடிக்கைகளுக்காக மொத்தமாக ரூபா.19,964,733 பெறுமதியான கொடுப்பனவுகள், இரண்டு செயற்குழு உறுப்பினர்களின் அங்கீகாரம் மற்றும் சான்றளிப்பைப் பெறாமல், பொருளாளரின் அங்கீகாரம் மற்றும் சான்றளிப்பின் கீழ் மட்டுமே வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனவே, இக்கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களாகக் கருதப்படுகின்றன. | நிறுவனத்தின் நிதிக்கு பொறுப்பான மிக உயர்ந்த அதிகாரி பொருளாளர் என்பதால், இரண்டாவது அனுமதி தேவையில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதி நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய விளையாட்டு நாட்காட்டி மற்றும் போட்டிகள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு நாட்காட்டியின்படி, மீளாய்வாண்டின்போது 07 சர்வதேச போட்டிகள், 14 தேசிய போட்டிகள் மற்றும் 13 உள்ளூர் | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்படும் வருடாந்த விளையாட்டு நாட்காட்டியை தேசிய ஒலிம்பிக் குழு செயல்படுத்துவதில்லை. | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டு நாட்காட்டியைப் பின்பற்றுங்கள். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்பாடுகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிட்டபடி 05 சர்வதேச போட்டிகள், 02 தேசிய போட்டிகள் மற்றும் 11 உள்ளூர் செயல்பாடுகள் நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், விளையாட்டு நாட்காட்டியில் சேர்க்கப்படாத 01 சர்வதேச போட்டி, 03 தேசிய போட்டிகள் மற்றும் 05 உள்ளூர் செயல்பாடுகளில் தேசிய ஒலிம்பிக் குழு பங்கேற்றிருந்தது. | | |
| (ஆ) | மொத்தமாக ரூபா.9,197,892 மீதியைக் கொண்ட ஐந்து (05) வங்கிக் கணக்குகள் ஐந்து வருடங்களுக்கும் மேலாகச் செயலற்றுக் காணப்பட்டன. இருப்பினும், நிதியைத் திறம்படப் பயன்படுத்துவதற்காக இக்கணக்குகளை மீண்டும் செயல்படுத்துவதற்கோ அல்லது கணக்குகளை மூடுவதற்கோ இவ்வறிக்கை வெளியிடப்படும் திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தின் செயல்பாட்டு நிலையை ஆய்வு செய்த பின்னர், எதிர்காலத்தில் அந்த வங்குக்கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி மீதிகள் திறம்படப் பயன்படுத்தப்பட வேண்டும். |